**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAHILA COURT / ADDITIONAL SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF CASES UNDER POCSO ACT,COIMBATORE.

S.C.No.97 of 2022

Prosecution witness - 4

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-4 செல்வி | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.07.2023.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் பெரியபோது, கதவுஎண் 1/151, காமராஜர் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்த மகளின் பெயர் கார்த்திகாயினி, இரண்டாவது மகளின் பெயர் சத்யப்பிரியா, ஆஜர் எதிரி என்னுடைய மூத்த மகளின் கணவர். நானும், ஆஜர் எதிரியும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள். கடந்த பதினான்கு வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரியான வெள்ளியங்கிரி மகன் செந்தில்நாதனை எனது மூத்த மகள் காதலித்து திருமணம் செய்து கொண்டாள். அதன்பிறகு எங்கள் வீட்டிற்கு அவள் அடிக்கடி வந்து செல்வாள். அவளுக்கு திருமணத்தின் பயனாக தர்ஷன், விஜயதரண் என்ற இரண்டு ஆண்குழந்தைகள். சம்பவ தினத்தன்று நான் கர்நாடகாவிலுள்ள சித்திரதுர்கா என்ற இடத்திற்கு சென்றுவிட்டேன். கடந்த 22.09.2019 அன்று அதிகாலை 2.00 மணிக்கு என்னுடைய மச்சான் கிருஷ்ணசாமி, என் கணவர் அ.சா.3 க்கு போன் செய்து, என்னுடைய மகள் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டாள் என்று தகவல் கொடுத்ததன்பேரில் என் கணவர் அ.சா.3 வீட்டிற்கே போய் பார்த்தார். பின்பு, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு என்னுடைய மகளை சிகிச்சைக்காக எடுத்து சென்று சிகிச்சை பலனின்றி அவள் இறந்து வரப்பட்டாள் என்று மருத்துவமனையில் சொல்லிவிட்டார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன். உடனடியாக நான் அங்கிருந்து புறப்பட்டு எங்களது ஊருக்கு வந்துவிட்டேன். என்னுடைய மருமகன்

கடந்த 4 ஆண்டுகளாக திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தைகளை இராமகிருஷ்ணா மடத்துக்கு சொந்தமான பள்ளியில் படிக்க வைத்துக் கொண்டு acting driver வேலை செய்து வருகிறார். என்னுடைய சம்பந்தியான வெள்ளியங்கிரியும், அவருடைய மகளான விஜயமதியும் என்னுடைய இரண்டாவது பேரனை வளர்த்துவதற்கும், கல்வி அளிப்பதற்கும் உதவியாக இருந்தார்கள். தற்போது குழந்தைகள் ஆஜர் எதிரி செந்தில்நாதனின் நேரடி பராமரிப்பிலும், கவனிப்பிலும் இருக்கிறார்கள். அவளுடைய இறப்பிற்கான காரணம் எனக்கு தெரியவில்லை. என்னுடைய பேரக்குழந்தைகளை நன்றாக பார்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். என்னுடைய பேரக்குழந்தைகள் என்னுடைய வீட்டிற்கு அடிக்கடி வந்து போக என் மருமகன் செந்தில்நாதனை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**<u>சாட்சி பிறழ்சாட்சியாக தோன்றுவதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது</u>-**

என்னுடைய மகள் கார்த்திகாயினி எதிரியை திருமணம் செய்த நாளிலிருந்து எதிரியுடன் நல்லமுறையில் வாழவில்லை என்றும், எதிரி மது அருந்திவிட்டு கார்த்திகாயினிடம் செல்போனை பிடுங்கிக்கொண்டு பெற்றோருடன் தொடர்பு வைப்பதை தவிர்த்து வந்தார் என்றும், எப்போதும் கார்த்திகாயினியை சந்தேகப்பட்டு அடித்துக் கொண்டிருந்தார் என்றும், மனஉளைச்சல் காரணமாக கார்த்திகாயினி கடந்த 20.09.2019 அன்று ஏற்பட்ட சண்டையில் எதிரி கார்த்திகாயினியை கொடுமைப்படுத்தி எங்காவது போய் செத்துத்தொலை, இல்லாவிட்டால் நான் கொன்றுவிடுவேன் என்று திட்டியதாக கார்த்திகாயினி என் கணவர் அ.சா.3 டம் போன் செய்து முறையிட்டாள் என்றும், இரண்டு நாட்கள் கழித்து 22.09.2019 அன்று நேரம் சரியாக தெரியாத காரணத்தால் அதிகாலை 2.00 மணிக்கு எனது மச்சான் கிருஷ்ணசாமி என் கணவர் அ.சா.3 க்கு போன் செய்து, கார்த்திகாயினி தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டாள் என்று சொன்னதன் பேரில் அ.சா.3 ஆனைமலை காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் கொடுத்ததாகவும் சொல்லிவிட்டு, ஆஜர் எதிரி எனக்கு மருமகன், உறவுக்காரர் என்பதால் உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை -**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

2023ம் ஆண்டு ஜீலை திங்கள் 04ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

அமர்வு நீதிபதி,
மகிளா கோர்ட் / கூடுதல் சிறப்பு நீதிமன்றம்
(பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகளை
பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் விசாரிக்கும்
சிறப்பு நீதிமன்றம்), கோயமுத்தூர்.

04/07/2023